ජනාධිපති කාර්යාලය
சனாதிபதி அலுவலகம்
PRESIDENTIAL SECRETARIAT

எனது இல : PS/DAD/PSS/01/25/G
திகதி : 13 செப்டெம்பர் 2025

அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள்,

மாகாண பிரதம செயலாளர்கள்,

திணைக்கள/நியதிச்சட்ட நிறுவனங்களின் தலைவர்கள்,

மாவட்ட செயலாளர்கள்,

பிரதேச செயலாளர்கள்.

சமூக அபிவிருத்தி குழுவின் (Community Development Council) சட்ட அடிப்படை, ஆக்க அமைவு, தாபிப்பு மற்றும் பணிகள்

**(2025.08.25 ஆம் திகதி நடைபெற்ற பிரஜாசக்தி தேசிய செயற்பாட்டுக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், அந்த குழுவின் பணிப்புரைக்கு இணங்க இந்த வழிகாட்டல்கள் வெளியிடப்படுகின்றன.)**

## 1. அறிமுகம்

சமூக அபிவிருத்தி குழு என்பது, கிராம அலுவலர் பிரிவில் உள்ள சமூக பிரதிநிதிகள், கிராம அலுவலர் பிரிவை அபிவிருத்திச் செய்வதில் ஆர்வமுள்ள பிரதிநிதிகள் மற்றும் பதவி வழியாக நியமிக்கப்படும் பிரதிநிதிகள் ஆகியோரை ஒன்றிணைத்து உருவாக்கப்படும் ஒரு குழுவாகும். ஏற்புடைய கிராம அலுவலர் பிரிவில் உள்ள ஒட்டுமொத்த சமூகமும் இதில் உறுப்பினராகலாம். உறுப்புரிமையை தன்னார்வ அடிப்படையில் பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன், நிகழ்நிலை முறையில் அதற்கான வசதிகள் வழங்கப்படும்.

## 2. சமூக அபிவிருத்தி குழுவின் சட்ட அடிப்படை

2.1. 'வளமான நாடு - அழகான வாழ்க்கை' என்ற தேசியக் கொள்கையின்படி, 2025.03.04 ஆம் திகதிய அமைப/25/0309/820/005-1 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் "பிரஜாசக்தி" வறுமை ஒழிப்புக்கான தேசிய இயக்கத்தை நடைமுறைப்படுத்துவதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

2.2. சமூக அபிவிருத்தி குழுவானது பிரஜாசக்தி தேசிய இயக்கத்தை கிராமிய மட்டத்தில் நடைமுறைப்படுத்துவதற்கான பிரதான பொறிமுறையாகும். இது பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் வகிபங்கை கிராம அலுவலர் பிரிவு வரை விரிவுபடுத்தும் ஒரு பொறிமுறையாகும்.

## 3. சமூக அபிவிருத்தி குழுவின் ஆக்க அமைவு

3.1. தலைவர், செயலாளர் உட்பட பதவி வழியாக நியமிக்கப்படும் 05 உறுப்பினர்கள் உள்ளடங்கிய செயற்குழு, கிராம அலுவலர் பிரிவின் ஒட்டுமொத்த சமூகத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் சமூக பிரதிநிதித்துவ உறுப்பினர் குழு மற்றும் மூலோபாய உறுப்பினர் குழு ஆகியவற்றுடன் மொத்தமாக குறைந்தபட்சம் 20 பிரதிநிதிகளையும் அதிகபட்சம் 25 பிரதிநிதிகளையும் கொண்டிருக்க வேண்டும்.

ගාලු මුවදොර, කොළඹ 01 / காலி முகத்திடல், கொழும்பு 01 / Galle Face, Colombo 01
දුරකථන / தொலைபேசி / Telephone: 011 2354354, 011 4354354
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011 2340340
ඊ-තැපෑල / மின்-அஞ்சல் / e-mail: ps@presidentsoffice.lk

3.2. மொத்த பிரதிநிதிகளில் குறைந்தபட்சம் ஐந்து (05) பெண்களின் பிரதிநிதித்துவம் மற்றும் ஐந்து (05) இளைஞர்களின் (15 - 29 வயதுடைய) பிரதிநிதித்துவம் இருத்தல் வேண்டும்.

3.3. இந்த குழுவானது சமூகத்தால் மதிக்கப்படும் மற்றும் உயர்வாக ஏற்றுக்கொள்ளப்படும் ஒரு அமைப்பாக இருப்பதால், அனைத்து பிரதிநிதிகளினதும் சிறந்த சமூக நடத்தை, நேர்மை, ஒழுக்கம் மற்றும் சட்டத்தை மதிக்கும் தன்மை போன்ற விடயங்களில் மிகுந்த கவனம் செலுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

3.4. சமூக அபிவிருத்தி குழுவின் கூட்ட அமர்வுகளுக்கு சமூக / பொருளாதார அபிவிருத்திக்காக நியமிக்கப்பட்டுள்ள பிரதேச மட்டத்தில் அனைத்து துறைகளுடனும் / விடயங்களுடன் தொடர்புடைய அலுவலர்களுக்கு தேவையின் பிரகாரம் பிரதேச செயலாளர் மூலம் அழைப்பு விடுக்க முடியும். இந்த அலுவலர்கள் குழுவின் பிரதிநிதிகளாகக் கருதப்படாததால்,மேலே குறிப்பிடப்பட்டுள்ள அதிகபட்ச வரையறைக்கு புறம்பாக அவர்களை பங்கேற்கச் செய்வதில் எவ்வித தடைகளும் இல்லை.

## 4. சமூக அபிவிருத்தி செயற்குழு

இக்குழு சமூக அபிவிருத்தி குழுவின் தலைவர், செயலாளர் உட்பட அதிகபட்சம் 05 பதவி வழியாக நியமிக்கப்படும் பிரதிநிதிகளை கொண்டிருக்கும்.

## 5. சமூக பிரதிநிதித்துவ உறுப்பினர் குழு

5.1. இக்குழு 10 - 15 இற்கு இடைப்பட்ட எண்ணிக்கையிலான பிரதிநிதிகளை கொண்டிருத்தல் வேண்டும்.

5.2. பிரதிநிதிகள் சமூக அபிவிருத்தி செயற்குழுவினால் இனங்காணப்பட்டு பரிந்துரை செய்யப்பட்ட பின்னர் பிரதேச ஒருங்கிணைப்பு குழுவினால் நியமிக்கப்படுவர்.

5.3. பிரதிநிதிகள் சம்பந்தப்பட்ட கிராம அலுவலர் பிரிவின் நிரந்தர குடியிருப்பாளர்களாக இருத்தல்

5.4. கிராம அலுவலர் பிரிவின் அனைத்து கிராமங்களும் பிரதிநிதித்துவப்படுத்தப்படல்.

5.5. சகல சமய, இன மற்றும் விசேட மக்கள் குழுக்கள் (வெவ்வேறு கலாச்சார அடையாளங்களுடனான) பிரதிநிதித்துவப்படுத்தப்படல்.

5.6. மிகவும் வறுமையான நபர்கள் என இனங்காணப்பட்ட குழுக்கள் மற்றும் பொருளாதார ரீதியாக வலிமையானவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தப்படல்.

5.7. பல்வேறு பொருளாதார செயற்பாடுகளில் ஈடுபடும் நபர்கள் பிரதிநிதித்துவப்படுத்தப்படல்.

5.8. அனைத்து நியமனங்களும் செயற்குழுவின் ஏகமனதான இணக்கப்பாட்டின் அடிப்படையில் செய்யப்படுதல் பொருத்தமானது என்பதுடன், அவ்வாறு அல்லாத சந்தர்ப்பமொன்றில் தலைவரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

## 6. மூலோபாய உறுப்பினர் குழு

6.1. இக்குழுவின் அதிகபட்ச பிரதிநிதிகளின் எண்ணிக்கை 05 ஆக இருத்தல் வேண்டும்.

6.2. பிரதிநிதிகள் சமூக அபிவிருத்தி செயற்குழுவினால் இனங்காணப்பட்டு பரிந்துரை செய்யப்பட்ட பின்னர் பிரதேச ஒருங்கிணைப்பு குழுவினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

6.3. இக்குழுவுக்குரிய பிரதிநிதிகள் கிராம அலுவலர் பிரிவில் நிரந்தர குடியிருப்பாளர்களாக இருப்பது கட்டாயம் அல்ல.

6.4. அதற்காக பின்வரும் துறைகளைப் பிரதிநிதித்துவம் செய்யும் நபர்களைத் தெரிவு செய்தல் பொருத்தமாகும்.

i. கல்விமான்கள்/நிபுணர்கள்/ஆராய்ச்சியாளர்கள்/ தொழில்வாண்மையாளர்கள்
ii. பொருளாதாரபணிகளுடன் தொடர்புடையநிறுவனங்கள்/ அமைப்புக்களின் மேல்மட்ட முகாமை
iii. வியாபாரிகள்/ தொழில்முயற்சியாளர்கள்
iv. அரச மற்றும் தனியார் துறை தொழில்களில் ஈடுபட்டுள்ள நபர்கள்
v. ஓய்வுபெற்ற சமூகத்தினர்
vi. வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள்

## 7. சமூக அபிவிருத்தி குழுவிற்கான பிரதிநிதிகளை நியமித்தல்

7.1. பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் சமூக அபிவிருத்திக் குழுவின் தலைவராக நியமிக்கப்படலாம் என்பதுடன் அவ்வாறு அல்லாத சந்தர்ப்பமொன்றில் அவரால் பிரதிநிதி ஒருவர் நியமிக்கப்படலாம்.

7.2. பிரதேச செயலாளரால் ஏற்கனவே அரச சேவையில் ஈடுபட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் சமூக வலுப்படுத்துகைக்கான உத்தியோகத்தராக நியமிக்கப்படுவார் என்பதுடன் அவர் குழுவின் செயலாளராகச் செயற்படுதல் வேண்டும்.

7.3. செயற்குழுவின் ஏனைய பிரதிநிதிகளாக கிராம அலுவலர் பிரிவுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள கிராம அலுவலர், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர் மற்றும் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்/கடற்றொழில் அலுவலர் ஆகியோர் பதவி வழியாக நியமிக்கப்படுவார்கள்.

7.4. சமூக அபிவிருத்தி குழுவினது சமூக பிரதிநிதித்துவ குழுவின் உறுப்புரிமைக்காக கிராம அலுவலர் பிரிவில் உள்ள எந்தவொரு நபரும் பெயர் முன்மொழிவுகளை சமர்ப்பிக்க முடியும். இந்த முன்மொழிவுகள் சமூக அபிவிருத்தி குழுவின் செயலாளருக்கு எழுத்து மூலமாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

7.5. சமூகப் பிரதிநிதித்துவ உறுப்பினர்களை நியமிக்கும்போது பின்வரும் அளவுகோல்கள் மீது விசேட கவனம் செலுத்துவது பொருத்தமானதாகும்.

i. குழுக் கூட்டங்களுக்கு முனைப்பான பங்கேற்பை வழங்க முடியுமாதல்.
ii. அதிக மக்கள் தொகை கொண்ட கிராம அலுவலர் பிரிவுகளில் முழு சமூகத்தையும் பிரதிநிதித்துவப்படுத்த முடியுமாதல்.
iii. அவர் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து சமூகக் குழுக்களினதும் பிரச்சினைகள் மற்றும் தேவைகளை சமூக அபிவிருத்தி குழுவுக்கு முன்னிலைப்படுத்த இயலுமாதல்.
iv. சமூக அபிவிருத்தி குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை அவர் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து சமூகக் குழுக்களுக்கும் அறிவிக்க இயலுமாதல்.
v. சமூகத்தை தொடர்புப்படுத்தி மேற்கொள்ளப்படும் கருத்திட்டங்கள் மற்றும் பொது நடவடிக்கைகளுக்காக அவர் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து சமூகக் குழுக்களுக்கும் தலைமைத்துவத்தை வழங்க முடியுமாதல்.

vi. கிராம அலுவலர் பிரிவில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி கருத்திட்டங்களின் சமூக கணக்காய்வு மற்றும் மேற்பார்வை பணிகளுக்கு சமூக பங்களிப்பைப் பெற முடியுமாதல்.

7.6. பெயர் முன்மொழிவுகளின் தகைமைகள் சமூக அபிவிருத்தி செயற்குழுவினால் பரீட்சிக்கப்பட வேண்டும். செயற்குழுவின் தீர்மானம் மற்றும் பரிந்துரையுடன் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

7.7. இந்தக் குழுவை நியமிக்கும் அதிகாரம் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவிடம் ஒப்படைக்கப்படுவதுடன் அக்குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் நியமனம் மேற்கொள்ளப்படும்.

7.8. சமூக அபிவிருத்தி குழுக்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து பிரதிநிதிகளுக்கும் பிரதேச செயலாளரால் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட வேண்டும்.

## 8. சமூக அபிவிருத்திக் குழுவின் தத்துவங்கள் மற்றும் பணிகள்

8.1. அடிப்படையில் சமூக அபிவிருத்தி குழுவின் பிரதிநிதி ஒருவராக செயல்படும்போது, அனைவரும் கூட்டுப் பொறுப்பின் கீழ் செயல்படக் கடமைப்பட்டுள்ளனர். அதன்படி, அனைத்து பிரதிநிதிகளும் குழுவின் பணிகளில் பொதுவாக பங்கேற்கலாம். மேலதிகமாக, ஒவ்வொரு உப குழுவினதும் உறுப்பினர் என்ற வகையில் ஒப்படைக்கப்படுகின்ற விசேட பொறுப்புகள் அந்தந்த உறுப்பினர் குழுவின் உறுப்பினர்கள், தலைவர் மற்றும் செயலாளருக்கு ஒப்படைக்கப்படும்.

8.2. சமூக அபிவிருத்தி குழுவின் பணிகள் குறித்து தீர்மானங்களை எடுக்கும் அதிகாரம், குழுவின் தலைவர், செயலாளர் அல்லது சமூக அபிவிருத்தி குழுவுக்கு நியமிக்கப்பட்ட ஏனைய பிரதிநிதிகளுக்கு மட்டுமே உள்ளது.

8.3. கிராம அலுவலர் பிரிவில் உள்ள வளங்கள், அபிவிருத்தித் தேவைகள், பிரச்சினைகள் மற்றும் எதிர்காலத் தேவைகள் தொடர்பில் ஆய்வுசெய்தல், கலந்துரையாடுதல், கருத்திட்ட முன்மொழிவுகள் மற்றும் பயனாளிகளை இனங்காணுதல், ஒன்றிணைந்த கிராம அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரித்தல் மற்றும் நிகழ்நிலை தரவு முறைமையை இற்றைப்படுத்துதல்.

8.4. முன்னுரிமைப்படுத்தப்பட்ட அபிவிருத்தி முன்மொழிவுகள் அடங்கிய ஒன்றிணைந்த கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கருத்திட்டங்களை செயற்படுத்துவதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகளை வழங்கும் நிறுவனங்கள் (அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், சமூக அடிப்படையிலான அமைப்புகள், தனியார் துறை போன்றன) மற்றும் கடமைப்பொறுப்பு அலுவலர்களை (வெளிக்கள அலுவலர்கள்) இனங்காணுதல் மற்றும் ஒருங்கிணைப்புச் செய்தல்.

8.5. பிரதேச அபிவிருத்தியின் நிமித்தம் இனங்காணப்பட்ட முன்மொழிவுகளை கொண்ட ஒன்றிணைந்த கிராம அபிவிருத்தித் திட்டத்தை சமூக அபிவிருத்தி குழுக்களின் ஒருங்கிணைப்பு உப குழுவிற்கு அனுப்புதல்.

8.6. கிராம அலுவலர் பிரிவிற்குள் செயற்படுத்தப்படும் அனைத்து கருத்திட்டங்களும், உச்ச பயனுறுவாகவும் வினைதிறனாகவும் செயற்படுத்தப்படுவதற்கு தேவையான ஒருங்கிணைப்பை மேற்கொள்ளல் மற்றும் சமூக பங்கேற்புடன் அக்கருத்திட்டங்களை மேற்பார்வைச் செய்தல்.

8.7. பிரதேச அபிவிருத்தி, நலன்புரி மற்றும் சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளின் கண்காணிப்பு, மேற்பார்வை மற்றும் சமூக கணக்காய்வில் உரிய உற்சாகத்துடனும் ஆர்வத்துடனும் ஈடுபடுதல்.

8.8. சமூக நிலையங்களை (Community Centers) நிறுவி சமூக உறவுகளை / சமூக ஒத்துழைப்பை / சகவாழ்வை மேம்படுத்தி பேணுதல்.

8.9. தேர்ந்தெடுக்கும் முறைகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் தர்க்கரீதியான தன்மையை அடையும் முகமாக தொடர்புடைய நிறுவனங்களுடன் இணைந்துச் செயலாற்றுதல்.

8.10. பொதுமக்களுக்கு அரச சேவைகளை வழங்குவதை எளிதாக்குவதற்கு அவசியமான வசதிகளை வழங்குவதற்காக கிராம அலுவலர் பிரிவு மட்டத்தில் சேவை வழங்கும் நிலையங்களை நிறுவுவதற்குத் தேவையான பரிந்துரைகளை ஏற்புடைய நிறுவனங்களுக்கு சமர்ப்பித்தல்.

8.11. கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் பயனாளிகள் மற்றும் முன்னுரிமைகளை இனங்காண உதவுதல்.

8.12. மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கள் மற்றும் பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்களை மறுசீரமைப்பதற்காக பொது நிர்வாக அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் மற்றும் அனைத்து நிரல் அமைச்சுக்கள், மாகாண சபைகள் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிறுவனங்களால் செயல்படுத்தப்படவுள்ள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான அறிவுறுத்தல்கள், வழிகாட்டல்கள் மற்றும் அளவுகோல்கள் குறித்து விழிப்புணர்வைப் பெறுதல்.

## 9. தலைவரின் பணிகள்

9.1. பிரஜாசக்தி வறுமை ஒழிப்புக்கான தேசிய இயக்கத்தில் கிராமிய மட்டத்தில் பிரதான ஒருங்கிணைப்பாளராகச் செயல்படுதல்.

9.2. சமூக அபிவிருத்தி குழுவுக்கான தலைமைத்துவத்தை வழங்குதல்.

9.3. சமூக அபிவிருத்தி குழுவின் பிரதிநிதிகள், அரச அலுவலர்கள் மற்றும் ஏனைய அனைத்து தரப்பினர்களுடனும் சிறந்த தொடர்பாடலைப் பேணுதல்.

9.4. பொறுப்புக்கூறல் மற்றும் வகைகூறல், நம்பிக்கை, வெளிப்படைத்தன்மை மற்றும் நியாயம் போன்ற பெறுமதிகளை குழுவில் பேணிச்செல்லல்.

9.5. தேவைகள் மற்றும் பிரச்சினைகளை சமூகத்தை அடிப்படையாகக் கொண்டு இனங்கண்டு ஒன்றிணைந்த கிராம அபிவிருத்தி திட்டத்தைத் தயாரிப்பதற்கு ஏற்ற சூழலை உருவாக்குதல்.

9.6. அபிவிருத்தி கருத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரித்தல் மற்றும் கருத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்குத் தேவையான நிதி ஏற்பாட்டினை ஒதுக்கிக்கொள்ளும்போது அரச, தனியார் துறை மற்றும் அரச சார்பற்ற தரப்பினர்களுடன் ஒருங்கிணைப்பு செய்தல் மற்றும் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படுகின்ற ஏனைய முன்னுரிமை நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதற்குத் தேவையான ஆதரவை சமூக அபிவிருத்திக் குழு ஊடாக வழங்குதல்.

9.7. ஒன்றிணைந்த கிராம அபிவிருத்தி திட்டத்தை செயல்படுத்தும்போது கருத்திட்டங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல்.

9.8. திடீர் அனர்த்தங்கள் மற்றும் பொருளாதார சரிவுகளை எதிர்கொள்ளும்போது பராமரிப்பு மற்றும் உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கு ஏற்புடைய நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து, மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பேணுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

9.9. குழுப் பிரதிநிதிகளின் திறன் அபிவிருத்தி மற்றும் ஊக்கப்பாட்டுக்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

9.10. சமூக அபிவிருத்தி குழுவினை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சமூக அபிவிருத்தி குழுக்களின் ஒருங்கிணைப்பு உப குழுவில் பங்கேற்றல்.

## 10. சமூக அபிவிருத்தி குழுவின் செயலாளரின் பணிகள்

10.1. கிராம அலுவலர் பிரிவில் சமூக வலுப்படுத்துகைக்கான உத்தியோகத்தராக செயல்படுதல்.

10.2. சமூக அபிவிருத்தி குழுவின் பணிகளின்போது, பிரதேச செயலாளர் மற்றும் பிரதி/உதவி பணிப்பாளர் (திட்டமிடல்) ஆகியோருடன் சிறந்த ஒருங்கிணைப்பைப் பேணுதல் மற்றும் தேவையான வழிகாட்டல்களை பெறுதல்.

10.3. பிரஜாசக்தி செயலகத்தின் சமூக அபிவிருத்தி குழு மட்டத்திலான ஒருங்கிணைப்பு உத்தியோகத்தராக செயற்படல்.

10.4. சமூக அபிவிருத்தி குழுக்களுக்கு பதவிவழியில் நியமிக்கின்ற அலுவலர்களுக்கு மேலதிகமாக நியமிக்கப்படுகின்ற ஏனைய உறுப்பினர்களை இனங்காணுதலுடன் தொடர்பான பெயர்ப் பட்டியல்களை தலைவரின் கையொப்பத்தில் பிரதேச ஒருங்கிணைப்பு குழுவுக்கு அனுப்புதல்.

10.5. தலைவரின் அறிவுறுத்தல்களின்படி, சமூக அபிவிருத்தி குழுக் கூட்டத்தை ஒன்றுகூட்டுதல், அறிக்கைகளை பேணுதல், உரிய ஆவணங்களைத் தயாரித்தல், தகவல்களை அறிக்கையிடுதல் மற்றும் அலுவலகத்தை கொண்டுநடத்துவதற்கு பொருத்தமான வேலைத்திட்டமொன்றை தயாரித்தல்.

10.6. ஒன்றிணைந்த கிராம அபிவிருத்தித் திட்டத்தை தயாரித்தல், நடைமுறைப்படுத்தல், மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகள் ஆகியவற்றுக்கு தேவைக்கேற்ப நியமிக்கப்படும் உப குழுக்களின் பணிகள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் பேணப்படும் அறிக்கைகளை உரிய முறையில் பெற்றுக்கொள்ளல் மற்றும் முறையாக பேணுதல்.

10.7. அபிவிருத்தி கருத்திட்ட செலவு மதிப்பீடுகளை தயாரித்தல், கருத்திட்டங்களுக்கு அவசியமான ஒதுக்கீடுகளை ஒதுக்கிக்கொள்ளல், கருத்திட்ட அறிக்கைகள், தகவல்கள் மற்றும் ஆவணங்களை தயாரித்தல் மற்றும் அரச, அரச சார்பற்ற மற்றும் தனியார் துறை பங்குதாரர்களுடன் ஒருங்கிணைப்பை மேற்கொள்ளல்.

10.8. ஒன்றிணைந்த கிராம அபிவிருத்தித் திட்டத்தை செயற்படுத்துகையில் மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் அவற்றை தொடர்புடைய பிரிவுகளுக்கு அனுப்புதல்.

10.9. பிரதேச செயலாளரை ஒருங்கிணைத்து பிரஜாசக்தி கிராம அபிவிருத்தித் திட்டத்திற்கு ஏற்புடைய தரவுகள் மற்றும் தகவல்களை கணினி முறைமையில் உள்ளீடு செய்தல் மற்றும் இற்றைப்படுத்தல்

## 11. பதவிவழியில் நியமிக்கின்ற அலுவலர்கள் மற்றும் ஏனைய அரச அலுவலர்களின் பணிகள்

11.1. ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைசார் பொறுப்புகளில் 'பிரஜாசக்தி வறுமை ஒழிப்புக்கான தேசிய இயக்கத்திற்கு' தேவையான ஆதரவை வழங்குதல்.

11.2. துல்லியமான தரவு மற்றும் தகவல்களைப் பெறுவதற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குதல்.

11.3. ஒவ்வொரு அலுவலரின் துறைகளுக்கும் ஏற்புடைய அபிவிருத்தி கருத்திட்டங்களை இனங்காணுதல், செலவு மதிப்பீடுகள் மற்றும் கருத்திட்ட அறிக்கைகளைத் தயாரித்தல் (தேவைக்கேற்றவாறு) மற்றும் உயர் மட்ட நிறுவனங்கள் மற்றும் அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து கருத்திட்டங்களை செயற்படுத்துவதற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குதல்.

## 12. சமூக பிரதிநிதித்துவ உறுப்பினர் குழுவின் பணிகள்

12.1. கிராம அலுவலர் பிரிவில் உள்ள ஒட்டுமொத்த சமூகத்தின் பிரதிநிதிகள் என்ற வகையில் செயற்பட்டு, அவர்களின் பிரச்சினைகள், தேவைகள் மற்றும் முன்மொழிவுகள் ஆகியவற்றை சமூக அபிவிருத்திக் குழுவுக்கு எடுத்து வருதல் மற்றும் சமூகத்தின் பிரதிநிதியாக செயற்படல்.

12.2. சமூக அபிவிருத்தி குழுவில் கலந்துரையாடலுக்கு உட்படுகின்ற விடயங்கள் மற்றும் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் மக்களை விழிப்புணர்வூட்டுதல்.

12.3. ஒன்றிணைந்த கிராம அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரிப்பதற்குத் தேவையான தரவு மற்றும் தகவல்களை வழங்குதல்.

12.4. ஒன்றிணைந்த கிராம அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரித்தல், செயற்படுத்துதல் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளுக்கு முனைப்பான பங்களிப்பை வழங்குதல்.

## 13. மூலோபாய உறுப்பினர் குழுவின் பணிகள்

13.1. கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்தக்கூடிய வருமான மார்க்கங்களை இனங்காணுதல்.

13.2. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கு தேவையான வளங்களையும் பயிற்சியையும் வழங்குதல் மற்றும் தேவைக்கேற்ப வளவாளர்களை ஒருங்கிணைத்தல்.

13.3. கிராமிய மக்களுக்கு வணிக வாய்ப்புகள் மற்றும் சந்தை இணைப்புகளை ஏற்படுத்துவதற்கு தேவையான ஒருங்கிணைப்பு

13.4. நடைமுறைரீதியான மற்றும் செயற்படுத்தக்கூடிய அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்குதல்.

13.5. வருமான மார்க்கங்கள் மற்றும் கருத்திட்ட முகாமைத்துவம் பற்றிய அறிவையும் அனுபவத்தையும் பகிர்ந்துகொள்ளுதல்.

13.6. நிகழ்கால மற்றும் எதிர்கால வேலைவாய்ப்புத் தேவைப்பாடு தொடர்பில் மனிதவள முகாமைத்துவத்திற்கு தேவையான வழிகாட்டலை வழங்குதல்.

13.7. அபிவிருத்திக் கருத்திட்டங்களை பிரயோகரீதியாக செயற்படுத்தலில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அனுபவங்களை பெற்றுக்கொடுத்தல்.

13.8. சமூக நம்பிக்கை மற்றும் கவர்ச்சியை ஏற்படுத்துவதற்காக முனைப்பான பங்களிப்பு வழங்கி உதவுதல்.

## 14. தொடக்க சமூக அபிவிருத்தி குழு

14.1. தலைவரின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் சமூக அபிவிருத்தி குழுவின் செயலாளரால் செயற்குழு ஒன்றுகூட்டப்படுதல்.

14.2. சமூக அபிவிருத்தி குழுவின் பிரதிநிதிகளுக்கான பெயர் முன்மொழிவுகளை கோருதல், இனங்காணல், மீளாய்வு செய்தல், பரிந்துரை செய்தல் மற்றும் நியமித்தல் ஆகியவற்றிற்காக பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவிற்கு அனுப்புதல்.

14.3. குழுவின் முதல் கூட்டத்திற்கான திகதி, இடம் மற்றும் நேரத்தை தீர்மானித்து அறிவித்தல்.

## 15. கூட்டம் நடைபெறும் இடம்

15.1. சமூக அபிவிருத்தி குழுக் கூட்டம் முடிந்தவரை சுயாதீனமான பொது இடத்தில் நடத்தப்பட வேண்டும். முடிந்தவரை, ஒரு சனசமூக நிலையம், பாடசாலை, பொது சங்கக் கூடம், பல்பணிக் கட்டிடம், அரச நிறுவனம் அல்லது அரச காணியில் கட்டப்படும் தற்காலிக மண்டபத்தைத் தேர்ந்தெடுப்பது மிகவும் பொருத்தமானதாகும்.

## 16. கூட்டங்களை நடத்துதல் மற்றும் கூட்டுதல்

16.1. ஒரு வருடத்திற்கு குறைந்தது 06 கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும். அது தொடர்பான தீர்மானங்களை எடுக்கும் அதிகாரம் சமூக அபிவிருத்தி குழுவுக்கு உண்டு.

16.2. கூட்டங்கள் நடத்தப்படும் திகதிகள் உள்ளடங்கிய ஒரு நேர அட்டவணையை (ஒரு பஞ்சாங்க ஆண்டிற்காக) பேணுதல் வேண்டும்.

16.3. சமூக அபிவிருத்தி குழுவின் தலைவரின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் செயலாளர் கூட்டங்களுக்கு பிரதிநிதிகளை அழைத்தல் வேண்டும்.

16.4. சாதாரண கூட்டங்களுக்கு மேலதிகமாக விசேட கூட்டங்களை தலைவர் நடத்த முடியும்.

16.5. கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் எந்தவொரு நபரும் கூட்ட அமர்வில் கலந்து கொள்ளலாம் என்பதுடன் அதற்காக தலைவரின் முன் அங்கீகாரத்தை பெற வேண்டும்.

16.6. பிரஜாசக்தி செயலகத்தின் அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவர் கூட்டங்களில் கலந்து கொள்ளலாம்.

## 17. கூட்ட நடப்பெண்

17.1. ஒரு கூட்டத்திற்கான நடப்பெண், தலைவர் மற்றும் செயலாளர் உட்பட சமூக அபிவிருத்தி குழுவின் மொத்த பிரதிநிதிகளின் எண்ணிக்கையில் 50% அல்லது அதற்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும்.

## 18. உறுப்புரிமையை இரத்துச் செய்தல்

18.1. சமூக அபிவிருத்தி குழுவின் பிரதிநிதி ஒருவரின் உறுப்புரிமையை இரத்துச் செய்யும் அதிகாரம் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

18.2. பின்வரும் சந்தர்ப்பங்களில் பிரதிநிதி ஒருவரின் உறுப்புரிமை இரத்துச் செய்யப்படலாம்:

i. பெரும்பான்மையான பிரதிநிதிகளால் குழுவின் கூட்டுப் பொறுப்பு புறக்கணிக்கப்பட்டுள்ளதாக தீர்மானிக்கப்படுதல்.
ii. உறுப்பினர் ஒருவர் ஒரு குற்றவியல் குற்றம் அல்லது நிதிசார் அல்லது ஊழல் குற்றத்திற்காக நீதிமன்றத்தால் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டிருத்தல்.
iii. உறுப்பினரின் மரணம்.
iv. உறுப்பினர் தனது சுய விருப்பின் அடிப்படையில் இராஜினாமா செய்தல்.

v. சமூக பிரதிநிதித்துவ குழுவின் உறுப்பினர் ஒருவர் கிராம அலுவலர் பிரிவை விட்டு வெளியேறிச் செல்லல்.
vi. முன்னறிவிப்பு இன்றி தொடர்ச்சியாக மூன்று கூட்ட அமர்வுகளில் கலந்து கொள்ளத் தவறியமை

19. பிரச்சினைகளுக்கான தீர்வு

19.1. சமூக அபிவிருத்தி குழுவின் ஏதேனும் பணி, நபர் அல்லது ஏனைய விடயம் தொடர்பான குற்றச்சாட்டுக்களை/முறைப்பாடுகளை எந்தவொரு நபரும் பொருத்தமான ஒரு ஊடகத்தின் மூலம் சமர்ப்பிக்க முடியும்.
19.2. சமூக அபிவிருத்தி குழுக்கள் தொடர்பான பிரச்சினைகளை/குற்றச்சாட்டுக்களை சமூக அபிவிருத்தி குழுக்களின் ஒருங்கிணைப்புக் குழுவிடம் நேரடியாகச் சமர்ப்பிக்க முடியும்.
19.3. ஒவ்வொரு குற்றச்சாட்டு/பிரச்சினை தொடர்பாகவும் சமூக அபிவிருத்தி குழுக்களின் ஒருங்கிணைப்புக் குழுவினால் எடுக்கப்படும் நடவடிக்கை தொடர்பாக சமூக அபிவிருத்தி குழுவுக்கு அறிக்கையிட வேண்டும். அடையாளத்துடன் குற்றச்சாட்டு/பிரச்சினை சமர்ப்பிக்கப்படும்போது, அதற்கு வழங்கப்படும் பதில் குறித்த நபருக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

20. கால வரையறை

சமூக அபிவிருத்தி குழுவின் உத்தியோகப்பூர்வ பதவிக்காலம் 03 ஆண்டுகள் ஆகும்.

21. சமூக கணக்காய்வு

21.1. ஒவ்வொரு கருத்திட்டத்திற்கும்/நிகழ்ச்சித்திட்டத்திற்கும் சமூக கணக்காய்வை நடத்துவது சமூக அபிவிருத்தி குழுவின் பொறுப்பாகும்.
21.2. ஒவ்வொரு கருத்திட்டத்தினதும்/நிகழ்ச்சித்திட்டத்தினதும் செலவு மதிப்பீடு மற்றும் உண்மையான செலவு உட்பட முழு விபரங்களையும் பகிரங்கப்படுத்த வேண்டும்.
21.3. கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் போதும், கருத்திட்டத்தின் முடிவிலும் சமூக கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டும்.
21.4. மேற்கொள்ளப்படும் கருத்திட்டங்கள்/நிகழ்ச்சித்திட்டங்கள் குறித்து பின்ஆய்வினை மேற்கொண்டு, அந்த கருத்திட்டங்கள் தொடர்பான பொதுமக்களின் திருப்தித்தன்மை குறித்து குழுவுக்கு அறிக்கையிட வேண்டும்.
21.5. கருத்திட்டங்கள் தொடர்பாக சமூக கருத்துக்கள் மற்றும் பின்னூட்டங்களை சேகரிப்பதற்காக தலையீடுகளை மேற்கொள்ள வேண்டும்.

22. PS/DASA/Circular/7/2025 ஆம் இலக்க மற்றும் 2025 ஆகஸ்ட் 22 ஆம் திகதி சனாதிபதியின் செயலாளரால் வெளியிடப்பட்ட 'பிரஜாசக்தி' வறுமை ஒழிப்புக்கான தேசிய இயக்கத்திற்கான சுற்றறிக்கையுடன் தொடர்பான வழிகாட்டல் கோவையின் ஒரு கட்டமாக இந்த வழிகாட்டல் வெளியிடப்படுகின்றது.